DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 5 |
| Name | : | **ஜெர்லின்** |
| Father's Name | : | ஜேக்கப் ஜெயபாரி |
| Village | : | கல்லுவழி |
| Taluk | : | காளையார்கோவில் |
| Calling | : | - |
| Age | : | 14/2025 |

**(வழக்கின் 1வது சிறையில் உள்ளார். 3ம் எதிரி ஆஜர். 2-ம் எதிரி ஆஜர் இல்லை. இரண்டாம் எதிரி சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 15.05.2025

(எனது பெயர் ஜெர்லின் நான் தற்போது எங்கு உள்ளேன் என்றால் நீதிமன்றத்தில் உள்ளேன். நான் தற்போது கல்லுவழியில் 9ம் வகுப்பு படித்து முடித்துள்ளேன். நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். என்னால் கேள்விகளை புரிந்துகொண்டு பதில் சொல்ல தெரியும். ) எனவே சாட்சி சாட்சியம் அளிக்க தகுதியானவர் என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது நான் கல்லுவழியில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லுவழியில் ஜான்போஸ்கோ பள்ளியில் 9ம் வகுப்புபடித்து முடித்துள்ளேன். அ.சா.1, அ.சா.2 எனது அத்தை மற்றும் மாமா ஆவார். அ.சா.3 வேதபோதக அரசி எனது அம்மா. சாட்சி ஜோபின் எனது தம்பி. சாட்சிகள் உபகாரமேரி, சின்னப்பன் ஆகியோர் எனது தாத்தா, பாட்டி ஆவார். கடந்த 25.01.2024ம் தேதி எனது அத்தையும் மாமாவும் எங்களை பார்த்துவிட்டு சென்றார்கள். அதன்பிறகு இரவு 9.00 முதல் 9.30 மணியளவில் அவர்கள் காளையார்கோவிலில் உள்ள அவர்கள் வீட்டிற்கு

சென்றுவிட்டார்கள். வழக்கம்போல் இரவு 10.30 மணிளவில் நாங்கள் சாப்பிட்டுவிட்டு நானும், எனது தம்பி, எனது தாத்தா, பாட்டி மற்றும் எனது அம்மாவுடன் வீட்டை பூட்டிவிட்டு படுக்க சென்றோம். நானும் எனது தம்பி மற்றும் எனது பாட்டியும் வீட்டிலிருந்த ஹாலில் படுத்திருந்தோம். எனது தாத்தா வெளியே உள்ள ரூமில் படித்திருந்தார். எனது அம்மா வீட்டிலிருந்த பெட்ரூமில் படுத்திருந்தார். எனது பாட்டி எப்போதும் பாத்ரூம் செல்வதற்காக வீட்டின் சைடு கேட் வழியாக செல்வார். அன்றைய தினம் எனது பாட்டி வழக்கம் போல் பாத்ரூம் சென்றுவிட்டு இரவு2.00 மணியளவில் சென்றுவிட்டு சைடு கேட்டை பூட்டாமலும் கதவையும் பூட்டாமலும் வந்து படுத்துவிட்டார். அப்போது ஒரு நபர் வீட்டிற்குள் வந்து கம்பியால் என் தலையில் அடித்தார். நான் வலியில் எனது பா ட்டி மீது படுத்துவிட்டேன். எனது தம்பி மற்றும் பாட்டி எழுந்தவுடன் அவர்களையும் அந்த நபர் கம்பியால் அடித்தார். எனது பாட்டி மற்றும் தம்பிக்கு தலையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. நாங்கள் போட்ட சத்தத்தில் எனது அம்மா வெளியே வந்தவுடன் அந்த நபர் எனது அம்மாவை கம்பியால் தாக்கும்போது கையால் தடுத்ததில் எனது அம்மாவிற்கு இரண்டு கை விரல்களில், தலையில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு வெளியே படுத்திருந்த தாத்தாவையும் தாக்கினார். நாங்கள் அனைவரும் சத்தம் போட்டவுடன் எங்களை தாக்கிய நபர் வெளியே சென்றுவிட்டார். வீட்டில் குண்டு பல்பு போட்டிருந்ததால் வெளிச்சம் இருந்தது. நாங்கள் அனைவரும் மயக்கமாகி படுத்துவிட்டோம். மறு நாள் காலை 7.30 மணியளவில் எனது பாட்டியிடமிருந்த போனை வாங்கி எனது அத்தை , மாமாவிற்கு தகவல் தெரிவித்தார். அதன்பிறகு எனது தம்பி வீ,ட்டுக்கருகில் குடியிருக்கும் இந்துமதி என்பவரிடம் தகவல் சொன்னார். உடனே எனது அத்தையும் மாமவும் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து ஆம்புலன்சில் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தார்கள். பின்பு எனது அத்தையும் மாமாவும் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது கபோர்டு உடைக்கப்பட்டிருந்தது. நகை பாக்ஸ்கல் தனித்தனியே கிடந்தன. பாக்சில் இருந்த நகைகள் இல்லை. மேல் சிகிச்சைக்காக நாங்கள் அனைவரும் வேலம்மாள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். சுமார் ஒன்றரை மாதங்கள் நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தேன். எங்களை தாக்கிய நபரை என்னால் அடையாளம் காட்டமுடியும். ஆஜராகியுள்ள 1ம் எதிரி தினேஸ்குமார் என்பவர்தான் எங்கள் வீட்டிற்குள் புகுந்து என்னையும் எங்கள் வீட்டில் உள்ளவர்களையும் தாக்கிய அந்த ஒரு நபர் ஆவார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

வீட்டுக்குள் வந்த நபர்கள் என்னை அடித்து காயப்படுத்திய பின்பு தான் எனது தம்பியை அடித்தார்கள். என்னை அடிக்கும்போது எனது தம்பி தூங்கிகொண்டிருந்தான். எனது தாத்தாவிற்கு காயம்பட்டது எனக்கு காலையில் தான் தெரியும் அதற்கு முன்பு தெரியாது. போலிசார் என்னை வேலம்மாள் மருத்துவமனையில் வைத்து விசாரிக்கும்போது ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் வந்ததாக சொல்லவில்லை. போலிசார் விசாரணையில் எங்களை தாக்கியது யாரென்று தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னை அடித்த நபரை காவல்நிலையத்தில் வைத்து தான் அடையாளம் காட்டினார்கள். அதன்பின்பு போலிசார் செல்போனில் உள்ள போட்டோவை காண்பித்து அடையாளம் சொன்னார்கள். எனது அத்தையும், மாமாவும் காலை 7.00 மணி முதல் 7.30 மணிக்குள் வந்தார்கள். நாங்கள் வீட்டிலிருக்கும்போது எனது அத்தையும் , மாமாவும் நகைகளை சரிபார்த்து திருடு போய்விட்டதாக சொன்னார்கள். எந்தெந்த நகை திருடு போனது என்ற விபரம் எனது அத்தைக்கும் மாமாவுக்கும் தெரியாது. நாங்கள் நள்ளிரவில் சத்தம் செய்தபோது அருகில் இருந்தவர்கள் யாரும் வரவில்லை. நான் காவல்துறையினர் சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி சொன்ன விதத்தில் காயம் ஏற்படவில்லை என்றும் எனது அம்மா சொல்லிக்கொடுத்தன்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2, 3ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை எனக் கூற பதிவு செய்யப்பட்டது.**

**மறு விசாரணை:** இல்லை

A PASUMPON SHANMUGAIAH
Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.05.15 12:35:08 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.